# வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
# துணை வேந்தர் பதவி

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 11 இற்கு இணங்கியதாகவும் 2023.04.10 ஆம் திகதியிடப்பட்ட, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 02/2023 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைவாக, சபையால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக துணைவேந்தரின் நியமனத்திற்கான நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக பொருத்தமான ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக, உப பிரிவு 11 ஏற்பாடுகளின் கீழ், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், சபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்றிலிருந்து, அமைச்சருடன் கலந்தாலோசிக்கப்பட்டு, ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்

கட்டுமானம், உற்பத்தி மற்றும் வேறு ஏதேனும் தொழில்நுட்ப அல்லது சேவைத்துறையிலுள்ள கல்விசார் தகைமைகள், அறிவு, மற்றும் அனுபவத்தைக் கொண்டவர்களிடையே மூன்று ஆட்கள் கொண்ட குழாம் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் அவர்களில் ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆள் ஒருவர் இரண்டு அடுத்தடுத்து பதவிக்காலங்களுக்கு மேலாக நியமிக்கப்படலாகாது. துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலர் ஒருவராகவும், அதன் பிரதான கல்வி அலுவலருமாவார். அவர் ஆளுநர்கள் சபை மற்றும் கல்விப் பேரவை ஆகிய இரு சபைகளினதும் பதவி வழி உறுப்பினர் ஒருவராகவும் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருத்தமான முறையான எழுத்துமூல ஆவணம் சரியாக பின்பற்றப்படுகிறது என்பதை உறுதிசெய்வதற்கு, சபையினால் அந்த நோக்கத்திற்காக காலத்திற்குக் காலம் சட்டரீதியாக வெளியிடப்படுகின்ற அவசியமான அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்க செயற்படுவது துணைவேந்தரின் கடமையாதல் வேண்டும், எனவும் அந்த நோக்கத்திற்காக அவசியம் எனக் கருதும்போது அத்தகைய வழங்கப்பட்ட அனைத்துத் தத்துவங்களையும் அவசியப்படும்போது பிரயோகிக்கலாம். இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, சபை மற்றும் கல்விப் பேரவையின் தீர்மானங்களை செயற்படுத்தி உறுதிப்படுத்துதல் துணைவேந்தரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலராகஇருத்தல் வேண்டும் என்பதுடன், பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும். துணைவேந்தர் பதவிக்காலத்திற்கு முன்னர் பதவியை விட்டு விலகுதல் அல்லது இந்தப்பிரிவின் உப பிரிவு (9) இன் கீழ் முன்னதாகவே பதவியிலிருந்து நீக்கப்பட்டால் தவிர, நான்கு வருட காலப்பகுதி ஒன்றிற்காக பதவி வகித்தல் வேண்டும் அல்லது அவர் 65 வயதை அடையும் வரை, எது முதலில் வருகிறதோ அதுவரை அவர் பதவியில் இருப்பார்.

காரணங்கள் குறிப்பிடப்படுமாயின், துணைவேந்தர் ஜனாதிபதியால் பதவியிலிருந்து நீக்கப்படலாம். தெரிவுசெய்யப்பட்ட பணிக்கு விண்ணப்பித்தவர்வலுவான ஆராய்ச்சி அனுபவம், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவப் பண்புகள் மற்றும் பல்வேறு ஆர்வமுள்ள குழுக்களுடன் புறநிலையாக தொடர்பு கொள்ளும் தனிப்பட்ட திறன்கள், கொள்கை பிரச்சினைகள் தொடர்பான தெளிவான புரிதல் மற்றும் தீர்மானங்களை பயனுறுதிவாய்ந்த வகையில் அமுல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட உயர் கல்விசார் அடைவுகள் தொடர்பான பதிவு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சமூகத்திற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் பண்பாண்மை மற்றும் செயல் இலக்கு பற்றிய ஆழமான புரிதல் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் (மேலும் எதிர்கால விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக வலைத்தளமான **www.uovt.ac.lk** னைப் பார்வையிடுவதற்கு அழைக்கப்படுகிறார்கள்).

துணைவேந்தர் மிக உயர்ந்த கல்விசார் சம்பள அளவுத்திட்டத்திட்டத்திற்கு தகுதியுடையவராக இருப்பதுடன் பதவிக்குப் பொருந்தமான ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவார்.

துணைவேந்தர் நியமனம் தொடர்பான தேர்வுச் செயன்முறை வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக துணைவேந்தரின் நியமனத்திற்கான நடைமுறையில் குறிப்பிப்பட்டுள்ள வகையிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 2023 ஏப்ரல் 10 ஆம் திகதியில் 03/2023 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு இணங்கியதாகவும் மேற்கொள்ளப்படும். நியமன நடைமுறையினைப் பார்ப்பார்வையிடுவதற்கு **https://uovt.ac.lk/wp-content/uploads/2022/03/Procedure.pdf** என்ற முகவரியை அணுக முடியும்.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 61 வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.

- ✓ விண்ணப்பதாரரின் பிறந்த திகதிஉள்ளிட்ட பூரணமான சுயவிபரக் கோவை ஒன்று.
- ✓ வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கான தனிப்பட்ட தொலைநோக்கு கூற்று ஒன்று மற்றும் விண்ணப்பதாரர் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் எதனை அடைவதற்கு முன்மொழிகிறார் என்பது தொடர்பான சுருக்கமான விளக்கம்.
- ✓ தற்போதைய துணைவேந்தர் விண்ணப்பதாரராக இருப்பின் அல்லது பல்கலைகழகத்தின் துணைவேந்தராக முன்னர் பதவிவகித்தவராக இருப்பாராயின், விண்ணப்பதாரர் மேலே உள்ள பிரிவு(ஐ) மற்றும் (ஐஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மலதிகமாக, விண்ணப்பதாரரின் முன்னைய பதவிக்காலத்தில் சாதித்த சாதனைகளை எடுத்துக்காட்டும் அறிக்கையினை வழங்குதல் வேண்டும்.
- ✓ விண்ணப்பதாரி வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய பகிரங்க சேவை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட அமைப்புகள் (நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள்) அரசிற்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவராயின், அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர் விடுவிக்கப்பட முடியும் என்பதைச் சுட்டிக்காட்டும் பணிக்கமர்த்துபவரிடம் இருந்துபெற்ற கடிதம் ஒன்று.

துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பதாரர் விசேட சபைக் கூட்டத்தில் மதிப்பீடு மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்காக அழைக்கப்படுவார். விதிவிலக்கான சந்தர்ப்பம் ஒன்றில், எவரேனும் விண்ணப்பதாரர் ஒருவர் விசேட சபைக் கூட்டத்தின் முன்னிலையில் சமுகமளிக்கமுடியாத நிலையில் இருப்பாராயின், அவர் செயலாளருக்கு வழங்கிய முன்னறிவித்தலுடன் மெய்நிகர்முறை வாயிலாக பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் இருப்பினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாது சுருக்கமான சமர்ப்பணம் ஒன்றை மேற்கொள்வதற்கு வேண்டப்படுகிறார்.

---

விண்ணப்பதாரிகள் மேலே கோரப்பட்டது போன்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்களை பல்கலைக்கழக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், வாழ்க்கைத்தொழில்சார்தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் இலக்கம் 100, கந்தவல, இரத்மலானையன்று முகவரியிடப்பட்டு சீலிட்டுமுடிய தபாலுறையினை பதிவுத்தபாலில் அல்லது கூரியர்சேவை அல்லது நேரடியாக 2025 செப்டம்பர் 30 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். மேலதிகமாக மேலே குறிப்பிட்ட ஆவணங்களை ஏனைய சான்றுக்குரிய ஆவணங்களுடன் மென் பிரதியை **PDF** வடிவில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு **dg@uovt.ac.lk** அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்குப் பிந்திக்கிடைக்கும் விண்ணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் மற்றும் ஏனைய ஆவணங்கள் உள்ளடங்கலாக தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் "துணை வேந்தர் பதவி" எனக் என குறிப்பிடப்படுதல் வேண்டும்.


பணிப்பாளர் நாயகம்
ஆளுநர்கள் சபையின் செயலாளர்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
**100,** கந்தவல, இரத்மலானை.

**Tel : 0112 630 708**
www.uovt.ac.lk
Email - **dg@uovt.ac.lk**


31 ஆகஸ்ட் 2025